# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) - 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA / COM 28 (I) – COST AND MANAGEMENT ACCOUNTING - I

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. வரைபுத்தாள் வழங்கப்படும்.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து, அது குறிக்கும் எழுத்தினை உமது விடைத்தாளில் எழுதுக.

i. ___________ என்பது ஒரு நிறுவனத்தினுடைய உள்ளக நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்ற முகாமை தகவல் முறையாகும்.

அ. நிதிக்கணக்கியல்
ஆ. முகாமைக்கணக்கியல்
இ. அரசாங்கக் கணக்கியல்
ஈ. இலாப நோக்கமல்லாத கணக்கியல்
உ. வெளியகக் கணக்காய்வு

ii. கீழ்வரும் முகாமைத்துவக் கணக்கியல் பற்றிய கூற்றுக்களில் சரியானது எது?

1. இது ஒரு நிறுவனத்தினுடைய முகாமை தகவல் முறைமையின் ஒரு பகுதியாகும்.
2. நிறுவனத்தினுடைய செயற்பாடுகளை திட்டமிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இதில் முகாமையாளர்கள் தங்கியுள்ளனர்.
3. முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக வெளியகப் பாவனையாளர்கள் இதில் தங்கியுள்ளனர்.

அ. 1 உம் 2 உம்
ஆ. 1 உம், 2 உம் 3 உம்
இ. 3
ஈ. 2
உ. 1

iii. கீழ்வரும் தரவுகளைக் கவனத்திற்கொள்க.

| | ரூபா. |
|---|---|
| பயன்படுத்திய நேர் மூலப்பொருள் | 150,000 |
| விற்பனைக்கிரயம் | 5,000 |
| நேரில் ஊழியம் | 7,000 |
| நிருவாகச் செலவு | 10,000 |
| தொழிற்சாலை உபகரணத் தேய்வு | 70,000 |
| நேர் ஊழியம் | 40,000 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 20,000 |
| நேரில் மூலப்பொருள் | 45,000 |

மாற்றீட்டுக்கிரயம்:

அ. ரூபா. 40,000
ஆ. ரூபா. 150,000
இ. ரூபா. 142,000
ஈ. ரூபா. 182,000
உ. ரூபா. 190,000

iv. கீழ்வருவனவற்றில் மாற்றீட்டுக் கிரயத்தின் உறுப்புக்கள் யாவை?

அ. நேர் மூலப்பொருளும், நேர் ஊழியமும்
ஆ. நேரில் மூலப்பொருளும், உற்பத்தி மேந்தலையும்
இ. நேர் ஊழியமும் உற்பத்தி மேந்தலையும்
ஈ. நேர் மூலப்பொருளும், உற்பத்தி மேந்தலையும்
உ. நேர் ஊழியமும், நேரில் ஊழியமும்

v. கிரயப் பண்பினைத் தீர்மானிப்பது எவ்வாறு அழைக்கப்படும்?

அ. கிரயத் தீர்மானிப்பு (Cost estimation)
ஆ. கிரய எதிர்வுகூறல் ( Cost prediction)
இ. கிரயப் பண்பு (Cost behavior)
ஈ. கிரயத் தொழிற்பாடு (Cost functions)
உ. கிரய நடவடிக்கை (Cost activity)

vi. கீழ்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

அ. தொழில் கிரயவியல் திணைக்களக் கிரயத்தை உருவாக்குகிறது. செய்முறைக் கிரயவியல் உற்பத்திக் கிரயத்தினை உருவாக்குகிறது.

ஆ. தொழில் கிரயவியல் பொருட் கிரயத்தினை உருவாக்குகிறது. செய்முறைக் கிரயவியல் செய்முறைக் கிரயத்தை உருவாக்குகிறது.

இ. தொழில், செய்முறை கிரயவியல் இரண்டும் பொருட் கிரயத்தினை உருவாக்குகிறது.

ஈ. தொழில், செய்முறை கிரயவியல் இரண்டும் திணைக்களக் கிரயத்துடன் தொடர்புபடுகின்றது.

உ. குறைவேலை செய்முறைக் கிரயவியலில் மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

vii. கீழ்வரும் பிரதான ஆவணத்தில் எது முறையான செயற்பாட்டுக்கிரய முறைமையிலுள்ளது?

அ. திணைக்கள உற்பத்தி அறிக்கை (Departmental Production Report)
ஆ. பிரதான அறிக்கை (Master Schedule)
இ. உற்பத்திப் பாதீடு (Production Budget)
ஈ. சீரான உற்பத்தி அறிக்கை (Sequential Production Report)
ஊ. மூலப்பொருள் தேவை அறிக்கை (Material Requirements Reports.)

viii. சேவைக் கிரயங்கள் உள்ளடக்குவது;

1. திட்டமிடல் (Design)
2. உற்பத்தி (Production)
3. கொள்வனவு (Purchase)

அ. 2 உம் 3
ஆ. 1 உம் 3
இ. 1 உம் 2
உ. 1
ஊ. மேற்கூறப்பட்டவற்றில் எதுவுமில்லை.

ix. கிரய அலகு இலாப ஆய்வு எண்ணக்கரு என்பது கிரயங்களை எவ்வாறு வகைப்படுத்துவதில் தங்கியுள்ளது?

அ. நிலையான மாறுங்கிரயங்களாக
ஆ. மாறும் உற்பத்திக் காலக்கிரயங்களாக
இ. உற்பத்திக் கட்டுபாட்டு, கட்டுபாடற்ற கிரயங்களாக
ஈ. 'அ' வும் 'ஆ' வும்
உ. 'அ' வும் 'இ' வும்

x. இலாப நட்டமற்ற புள்ளி என்பது, செயற்பாட்டு மட்டமானது:

அ. மொத்த வருமானம் மொத்த செலவுக்கு சமனாக இருக்கும்போது
ஆ. மொத்த வருமானம் மொத்த நிலையான செலவுக்கு சமனாக இருக்கும்போது
இ. மொத்த வருமானம் மாறும் செலவுக்கு சமனாக இருக்கும்போது
ஈ. மொத்த வருமானம் உற்பத்திச் செலவுக்கு சமனாக இருக்கும்போது
உ. 'இ' அல்லது 'ஈ'.

xi. கீழ்வரும் கூற்றுக்களில் எது கிரய, அளவு, இலாப (CVP) ஆய்வின் எடுகோள்களில் ஒன்றல்ல?

அ. கிரயமானது நிலையான மாறும் உறுப்புக்களாக பிரிக்கப்படலாம்
ஆ. மொத்த வருமானம் மொத்தச் செலவு என்பன வெளியீட்டு அலகுகளுக்கு **Linear** ஆகக் காணப்படும்
இ. அலகு விற்பனை விலை, அலகு மாறும் கிரயம், அலகிற்கான நிலையான செலவு என்பன அறியப்பட்டதாகவும் மாறாமலும் காணப்படும்.
ஈ. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது வேறுபட்ட பொருட்களின் வீதாசாரம் மாறாமல் காணப்படும்.
உ. மொத்த நிலையான செலவு மாறாமல் காணப்படும்.

xii. KKL நிறுவனம் ஒரு தனிப்பொருளினை விற்பனை செய்கின்றது. 7,000 அலகுகளை விற்பனை செய்து ரூபா. 70,000 விற்பனை வருமானத்தை உழைக்கிறது. மேலும் ரூபா. 28,000 மாறும் கிரயமாகவும் ரூபா. 12,000 நிலையான கிரயத்தினையும் கொண்டுள்ளது எனின் ஒரு அலகிற்கான பங்களிப்பு யாது?

அ. 4.00
ஆ. 4.29
இ. 6.00
ஈ. 6.29
உ. எந்தவொரு விடையும் சரியல்ல.

(12 புள்ளிகள்)

(ஆ) நெட்டுயுன் கம்பனி நடைமுறையில் ஒரு தடவையில் அல்பா எனும் மூலப்பொருளில் 1,500 உறுப்புக்களினை கொள்வனவு செய்வதோடு வருடத்திற்கு 8 கட்டளைகளினையும் மேற்கொள்கிறது. இக்கம்பனி அதனது இருப்புக் கொள்கையினை மீள்பரிசீலனை செய்வதனால் அல்பா மூலப்பொருளிற்கான கீழ்வரும் பல்வேறுபட்ட மாற்றீட்டு மறு கட்டளையிடும் அளவினை கருத்திற் கொள்கின்றது.

(1) ஒரு தடவையில் 1,000 அலகுகளை கொள்வனவு செய்தல்
(2) ஒரு தடவையில் 2,000 அலகுகளை கொள்வனவு செய்தல்
(3) ஒரு தடவையில் 2,400 அலகுகளை கொள்வனவு செய்தல்

1,000 அலகு வரைக்குமான கொள்வனவிற்கு கொள்வனவு விலை ஒரு அலகிற்கு ரூபா. 10 எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு 1,001 இல் இருந்து 2,000 வரைக்கும் காணப்படும்போது முழுமையான கட்டளைக்கும் வழங்குனர் 5% கழிவினை வழங்குவார். மேலும் கொள்வனவானது 2,000 அலகைத் தாண்டும்போது முழுமையான கட்டளையில் 10 % குறைப்பு காணப்படும். ஒவ்வொரு கொள்வனவுக் கட்டளைக்கும் ரூபா. 50 நிருவாகக் கிரயம் ஏற்படுகிறது. களஞ்சியசாலை, முதலீட்டு மீதான வட்டி உட்பட ஏனைய வைத்திருத்தல் செலவு சராசரியாகக் காணப்படும் இருப்பில் ஒரு அலகிற்கு ரூபா. 3 உம் ஏற்படும்.

**வேண்டப்படுவது:**

பல்வேறுபட்ட மாற்றீட்டு மறு கட்டளையிடும் அளவுகளில் எது உச்சக் கட்டளையிடும் மட்டம் என முகாமைக்கு ஆலோசனை வளங்குக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) செய்முறைக் கிரயவியலில் பயன்படுத்தப்படும் பின்வரும் பதங்களை விளக்குக.

i. சாதாரண நட்டம் (Normal losses)
ii. அசாதாரண நட்டம் (Abnormal losses)
iii. சாதாரண இலாபம் (Normal gain)
iv. அசாதாரண இலாபம் (Abnormal gain)

(8 புள்ளிகள்)

(ஆ) ஒரு பொருள் A, B என்ற இரு செய்முறையில் பூரணப்படுத்தப்படுகிறது. A, B. குறிப்பிட்ட ஒரு மாத காலப்பகுதியில் A செய்முறையிற்கு ஒரு அலகு ரூபா. 2 படி 5000 அலகுகள் உள்ளீடு செய்யப்பட்டது. அம்மாதத்திற்கான ஏனைய தகவல்கள் பின்வருமாறு.

| விபரம் | செய்முறை - A | செய்முறை - B |
|---|---|---|
| வெளியீட்டு (அலகுகள்) | 4,700 | 4,300 |
| சாதாரண நட்டம் (உள்ளீட்டின் % மாக) | 5 | 10 |
| மீதப் பெறுமதி ஒரு அலகிற்கு (ரூபா.) | 5 | 5 |
| நேர்கூலி (ரூபா.) | 3,000 | 5,000 |
| நேர் செலவுகள் (ரூபா.) | 9,750 | 9,910 |

மொத்த மேந்தலைகள் ரூபா. 16,000 நேர் உழைப்பின் வீதாசாரமாக ஒதுக்கப்படும். ஆரம்பக் குறை வேலை, இறுதிக் குறை வேலை இருப்புக்கள் எதுவுமில்லை.

செய்முறை – A, செய்முறை – B கணக்கினையும் ஏனைய அவசியமான கணக்குகளையும் தயாரிக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அலக்ஸ் சேவை நிறுவனங்களுக்கு கார் பெற்றரிகளினை சராசரியாக ஒன்று ரூபா. 30 இற்கு விற்பனை செய்கிறார். ஒரு பெற்றரியினது மாறும் கிரயம் ரூபா. 20 வும் மாதாந்த நிலையான உற்பத்திக் கிரயம் ரூபா. 10,000 உம் ஆகும்.

வேண்டப்படுவது;

i. இலாப நட்டமற்ற புள்ளி பெற்றரிகளில் யாது?

ii. விற்பனை ரூபா. 60,000 எனின், பாதுகாப்பு எல்லை யாது?

iii. மாறும் கிரயம் 20 % ஆல் அதிகரிக்கிறது எனின், இலாப நட்டமற்ற புள்ளி பெற்றரிகளில் யாது?

iv. விற்பனை மட்டம் 10 % ஆல் உயர்வடைவதோடு, நிலையான உற்பத்திக் கிரயம் 10 %ஆல் குறைவடைகிறது எனின், இலாப நட்டமற்ற புள்ளி பெற்றரிகளில் யாது?

v. ஆரம்பத் தகவல்களைப் பயன்படுத்தி மத்திம புள்ளி அட்டையை ஒரு வரைபுத்தாளில் வரைக.

(20 புள்ளிகள்)

04. அல்பா நிறுவனத்தின் நடைமுறையில் காணப்படும் உபகார முறை (Incentive System) பின்வருமாறு:

| | |
|---|---|
| சாதாரண வேலை வாரம் | 8 மணித்தியாலங் கொண்ட 5 நாட்கள், 3 மணித்தியாலங்களைக் கொண்ட பிந்திய 3 சுழற்சி (shift) |
| செலுத்துகை வீதம் (Rate of Payment) பகல் வேலை | : ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா. 160 |
| பிந்திய சுழற்சி | : ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா. 225 |
| 49 மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு வாரத்தில் ஒரு செயற்பாட்டாளருக்கான சராசரி வெளியீடு (3 பிந்திய சுழற்சி உள்ளடங்கலாக) | :120 துண்டுகள் |

வெளியீட்டினை அதிகரிப்பதற்காகவும் மேலதிக நேர வேலையை குறைப்பதற்காகவும் செலுத்துகை முறையை முடிவுகளின் அடிப்படையில் மாற்றுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

| | | |
|---|---|---|
| நேரக்கூலி (வழமையானது) | : | ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா. 160 |
| 15 துண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அடிப்படை நேரம் | : | 5 மணித்தியாலங்கள் |
| துண்டுக்கூலி வீதம் | : | அடிப்படை துண்டுக்கூலியுடன் 20% ஐ சேர்க்கவும் |
| உபகார வட்டம் (Premium Bonus) | : | நேரத்துடன் 50% ஐ சேர்க்கவும் (Add 50% to time). |

**வேண்டப்படுவது:**

(i) கீழ்வரும் முறைகளில் ஒரு செயற்பாட்டாளருக்கான வேலை செய்த மணித்தியாலங்கள், வாராந்த உழைப்பு, உற்பத்திசெய்த துண்டுகள், ஒரு துண்டுக்கான ஊழியக்கிரயம் போன்றவற்றைக் காட்டக்கூடிய ஒரு கூற்றினைத் தயாரிக்குக.

(அ) நடைமுறை நேரக்கூலி (Existing time-rate)
(ஆ) நேர் துண்டுக் கூலி (Straight piece-work)
(இ) றொவான் முறை (Rowan system)
(ஈ) ஹைலீஸ் வட்ட முறை (Halsey premium system)

மேற்கூறப்பட்ட நேர் துண்டுக் கூலி முறையின்கீழும் றொவான் முறையின் கீழும், ஹைலீஸ் வட்ட முறையின் கீழும் 40 மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு வாரத்தில் 135 துண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன என்றும் ஹைலீஸ் வட்ட முறையின் கீழ் ஊழியர் சேமிக்கப்பட்ட நேரத்தில் அரைவாசியை உழைக்கிறார் எனவும் கருதிக்கொள்க.

(5×4 = 20 புள்ளிகள்)

அலொய் இன்ஸ்றுமென்ட் உற்பத்தி பிறைவட் நிறுவனம் மோட்டார் வாகன டேஸ் போட்டுக்கான கெக்ஸினை உற்பத்தி செய்கின்றது. கம்பனி வடிவமைத்தல (Modeling), ஒன்று சேர்த்தல் (Assembly) என்ற இரு உற்பத்தித் திணைக்களங்களையும், ஆளணி, பராமரிப்பு, பொறியியல் என்ற மூன்று சேவைப் பகுதிகளையும் கொண்டுள்ளது. 2008 இல் சேவைப் பகுதிகளின் வெளியீட்டு பாவனைகள் பின்வருமாறு தரப்படுகிறன.

| 2008 இல் சேவை வெளியீட்டு பங்கீடு (சேவைகளின் மணித்தியாலத்தில்) 2008 | | | |
|---|---|---|---|
| சேவையைப் பயன்படுத்துபவர் | சேவையை வழங்குபவர் | | |
| | ஆளணி | பராமரிப்பு | பொறியியல் |
| ஆளணி | | | |
| பராமரிப்பு | 250 | | |
| பொறியியல் | 250 | 250 | |
| வடிவமைத்தல் (Modeling) | 2,000 | 1,750 | 2,250 |
| ஒன்று சேர்த்தல் (Assembly) | 2,500 | 2,000 | 750 |
| மொத்தம் | 5,000 | 4,000 | 3,000 |

2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலொய் இன்ஸ்றுமென்ட் நிறுவனத்தின் சேவைத் திணைக்களத்தின் பாதீடு செய்யப்பட்ட கிரயங்கள் பின்வருமாறு.

| | ஆளணி ரூபா. | பராமரிப்பு ரூபா. | பொறியியல் ரூபா. |
|---|---|---|---|
| மாறும் | 25,000 | 40,000 | 25,000 |
| நிலையான | 100,000 | 75,000 | 150,000 |
| மொத்தம் | 125,000 | 115,000 | 175,000 |

**வேண்டப்படுவது:**

i. அலொய் இன்ஸ்றுமென்ட் நிறுவனத்தின் சேவைத் திணைக்களத்தின் கிரயத்தினை அதனது உற்பத்தி திணைக்களத்திற்கு நேர் முறையைப் பயன்படுத்தி ஒதுக்குக.

ii. அலொய் இன்ஸ்றுமென்ட் நிறுவனத்தின் சேவைத் திணைக்களத்தின் கிரயத்தினை அதனது உற்பத்தி திணைக்களத்திற்கு ஸ்டெப் டௌன் (Step Down) முறையைப் பயன்படுத்தி ஒதுக்குக.

iii. திணைக்களக் கிரய ஒதுக்கீட்டின் மூன்று முறைகளையும் விளக்குக.

iv. திணைக்கள கிரய ஒதுக்கீட்டின் வரையறைகள் யாவை?

(20 புள்ளிகள்)

****